12th November 1965]

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்வியில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கோர் கிராண்ட் அளிப்பது பற்றிக் கேட்டிருந்தேன். இப்போது வந்திருப்பதில் கிராண்ட் ஏதேனும் கேட்டு விண்ணப்பம் வந்ததா என்று இருக்கிறது. கோர் கிராண்ட் ஏதேனும் கோரி விண்ணப்பம் வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

* **496 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் லெப்பைக்குடிக்காடு உயர் நிலைப் பள்ளியின் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனை சீர்திருத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில் 'மேற்பரப்பு' என்று கேட்டிருந்தேன். ஆனால் இதிலே கட்டடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெய்யில் காலத்திலும் உட்காரப் பயன் இல்லாது, மழை காலத்திலும் உட்காரப் பயன் இல்லாது இருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்து பழுது பார்க்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது ஓரளவு பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. மேலும் புதுப்பிக்க அரசாங்கம் உதவி அளிக்கும்.

திருமதி சௌதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, உடையார்பாளையம் ஸ்கூலில் கட்டட வசதி போதாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் மேலும் கட்டடத்தை விஸ்தரிப்பு செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் அரசாங்கம் என்ன உதவி அளிக்கலாம், ஸ்தலத்திலே எவ்வளவு உதவி எதிர்பார்க்கப்படுகிறது என்று நான் கூற முடியும்.